தினமணி

**தமிழகம், புதுவையில் மழை பெய்யும்**

First Published : 17 Oct 2011 04:19:05 AM IST

சென்னை, அக். 16: தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததன் காரணமாக தமிழகம், புதுவையில் திங்கள்கிழமை (அக்.17) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை கனமழை பெய்தது. சென்னையின் புறநகர் பகுதிகள் சிலவற்றிலும் லேசான மழை பெய்தது. மற்ற இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்திலேயே அதிகபட்சமாக ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் 100 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை திங்கள்கிழமை சில இடங்களில் கனமழையும், கடலோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும் பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**புளி விலை கடும் உயர்வு**

First Published : 17 Oct 2011 03:23:08 AM IST

சென்னை, அக். 16:÷கடந்த ஆகஸ்ட் வரையிலான 18 மாத காலத்தில் புளியின் மொத்த விலை, கிலோவுக்கு ரூ. 70-க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 2010, ஜனவரியில் கிலோவுக்கு ரூ. 35 ஆக இருந்தது, படிப்படியாக உயர்ந்து தற்போது ரூ. 110-க்கு விற்கப்படுகிறது.

இது தோடர்பாக சென்னை, சேலம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை பகுதிகளைச் சேர்ந்த மொத்த விற்பனையாளர்களிடம் கேட்டபோது, உயர் ரக புளியின் விலை ரூ. 140 ஆக உள்ளதாகவும், கடந்த 5 ஆண்டுகளில் இதுவே மிக அதிகபட்ச விலையென்றும் தெரிவித்தனர். போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளால் சில்லறை விற்பனைக் கடைகளில் இந்த விலை மேலும் அதிகரித்து, கடந்த 2 மாதங்களாக சுத்திகரிக்கப்பட்ட புளியின் விலை, ரூ. 170லிருந்து 180 ஆக இருக்கிறது.

காரணம் என்ன:÷தேவை அதிகரித்து வரும் நிலையில், கடந்த சில ஆண்டுகளாகப் புளி உற்பத்தி குறைந்துள்ளதே, இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணமாகும்.

குறிப்பாக 2005-2009 இடைப்பட்ட காலத்தில் புளி உற்பத்தி 6 ஆயிரம் டன் குறைந்துள்ளதாக அரசு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. எனினும், வரும் ஜனவரி மாதத்தில் புளி வரத்து இருக்கும் என எதிர்பார்ப்பதால், விலை சற்றுக் குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**புளி விலை கிடு... கிடு... உயர்வு:குவிண்டால் ரூ.10,000 த்தை தாண்டியது**

அக்டோபர் 17,2011,00:04



சென்னை:நாட்டில், கொட்டைப் புளியின் உற்பத்தி குறைந்து வருவதால், அதன் விலை மூன்று மடங்கு அதிகரித்துள் ளது. இந்தியாவில் தமிழகம், கர்நாடகம், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் புளி அதிக அளவில் உற்பத்தியாகிறது. கொட்டைப் புளி உற்பத்தியில் கர்நாடகா முதலிடத்திலும், தமிழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்நிலையில், புளிய மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், புளி உற்பத்திசரிவடைந்து வருகிறது. மேலும், வெளிநாடுகளுக்கு கொட்டைப் புளி அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணமாகவும், விலை அதிகரித்து வருகிறது.இது குறித்து, நறுமணப் பொருட்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், கடந்த 2003-04ம் ஆண்டு, நாட்டில் புளி விளையும் பரப்பளவு 60 ஆயிரத்து 629 எக்டேராகவும், புளி உற்பத்தி 1 லட்சத்து 83 ஆயிரத்து 871

டன்னாகவும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, 2004-05ம் ஆண்டு 61 ஆயிரத்து 624 எக்டேராகவும், உற்பத்தி 1 லட்சத்து 94 ஆயிரத்து 32 டன் என்ற அளவிலும் அதிகரித்திருந்தது. ஆனால், 2005-06ம் நிதியாண்டில், புளி விளையும் பரப்பு 61 ஆயிரத்து 84 எக்டேராகவும், உற்பத்தி 1 லட்சத்து 92 ஆயிரத்து 186 டன் என்ற அளவிலும் குறைந்தது.

இது, 2006-07ம் நிதியாண்டு மேலும் குறைந்து 58 ஆயிரத்து 624 எக்டேராகவும், உற்பத்தி 1 லட்சத்து 90 ஆயிரத்து 73 டன் என்ற அளவிலும் சரிவடைந்தது. 2007-08ம் நிதியாண்டில், இது மேலும் குறைந்து, புளி விளையும் பரப்பளவு 55 ஆயிரத்து 682 எக்டேர் என்ற அளவிலும், புளி உற்பத்தி 1 லட்சத்து 88 ஆயிரத்து 278 டன்னாகவும் குறைந்தது. கடந்த 2008-09ம் நிதியாண்டில், புளி விளையும் பரப்பளவு 54 ஆயிரத்து 222 எக்டேராக மேலும்சரிவடைந்தது. ஆனால், புளி உற்பத்தி, முந்தைய ஆண்டை விடசற்று உயர்ந்து, 1 லட்சத்து 93 ஆயிரத்து 873 டன்னாக உயர்ந்தது.

இதன்படி கடந்த 2004-05 மற்றும் 2008-09ம் நிதியாண்டுகளில், புளிய மரங்களின் பரப்பளவு 13சதவீதம் குறைந்துள்ளது. இதே காலத்தில் புளி உற்பத்தி 1 லட்சத்து 94 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்து 1 லட்சத்து 93 ஆயிரம் டன்னாகக் குறைந்துள்ளது. எனினும், இதே காலத்தில் புளி மகசூல் 3.15 டன் என்ற அளவில் இருந்து 3.51 டன்னாக உயர்ந்துள்ளது. உள்நாட்டில் புளி உற்பத்தி குறைந்ததால், அதன் விலை அதிகரித்து வருகிறது. சென்ற செப்டம்பர் மாதம் ஒரு குவிண்டால் புளி 9,500 ரூபாய் முதல் 11 ஆயிரத்து 250 ரூபாய் வரை விற்பனையானது.

பெங்களூருவில் 4,800 ரூபாய்க்கு விற்பனையான ஒரு குவிண்டால் புளி தற்போது 10 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக விற்பனையாகிறது.புளி ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்து வருகிறது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், 80 கோடி ரூபாய் மதிப்பிலான 17 ஆயிரத்து 500 டன் புளி ஏற்றுமதி செய்யப்பட்டது.

கடந்த 2005-06ம் நிதியாண்டில், 31 கோடி ரூபாய் மதிப்பிற்கு புளி ஏற்றுமதி செய்யப்பட்டது.புளி விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எனினும், டிசம்பர் மாதம் புதிய புளிசந்தைக்கு வரும் என்பதால், தீபாவளிக்கு பிறகு புளி விலை குறையும் என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## இந்தியாவில் ஆண்டுக்கு 35 கோடி டன் கரும்பு உற்பத்தி

அக்டோபர் 17,2011,00:03



கோவை:"இந்தியாவில் ஆண்டுக்கு, 35 கோடி டன் கரும்பு விளைகிறது. இது, முக்கியமான வணிகப் பயிராக மாறி யுள்ளது," என, தமிழக அரசின் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பதிவாளர் மற்றும் சர்க்கரைத் துறை ஆணையர் ராஜீவ் ரஞ்சன் கூறினார். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கரும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின், 43வது கூட்டம், கோவையில் நடைபெற்றது. கரும்பு இனப்பெருக்க நிலையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் சர்க்கரை ஆலைகள் இணைந்து நடத்திய இக்கூட்டத்தில், கரும்பு ரகங்களின் திறன் மற்றும் பாசன நீர் உபயோகத்திறனை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், தமிழக அரசின் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பதிவாளர் மற்றும் சர்க்கரைத் துறை ஆணையர் ராஜீவ் ரஞ்சன் பேசியதாவது: இந்தியாவில் நெடுங்காலமாக கரும்பு விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஏறத்தாழ, 50 லட்சம் எக் டேரில் ஆண்டுக்கு, 35 கோடி டன் கரும்பு உற்பத்தியாகிறது. வேளாண் துறை சார்ந்து இயங்குவதில், ஜவுளித் துறைக்கு அடுத்தபடியாக சர்க்கரை உற்பத்தி தான் இரண்டாவது பெரிய தொழிலாக உள்ளது. இந்தியாவின் முதல் சர்க்கரை ஆலை, வங்காளத்தில் ஹுக்ளி நதிக்கரையில் 1784ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது நாட்டில், 520க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகள் உள்ளன. இந்தியாவின் மொத்த கரும்பு உற்பத்தியில்,60சதவீதம் இந்த ஆலைகளில் அரைக் கப்பட்டு, அதன் மூலம், 2 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பு உற்பத்தியில் மகாராஷ்ட்ரா மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. தமிழகம் உள்ளிட்ட, 9 மாநிலங்களில், 12 சதவிதத்துக்கும் அதிகமானோர் கரும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தின் மொத்த விளை நிலத்தில், 5 சதவிதம் கரும்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. ஐந்தாயிரம் முதல், 15 ஆயிரம் கரும்பு உற்பத்தி யாளர்கள், 2.5 லட்சம் முதல், 15 லட்சம் டன் வரையில் கரும்பை உற்பத்தி செய்து சர்க்கரை ஆலைகளுக்கு தருகின்றனர். எண்ணிலடங்கா மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை தருவதோடு, கிராமங்களில் வசிக் கும் எளிய மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் கரும்பு உறுதுணையாக

உள்ளது. தேசத்தின் வளர்ச்சியில், கரும்பு உற்பத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய அணுகு முறைகளைக் கையாண்டு கரும்பு விளைச்சலை அதிகரிக்க வேண்டும்.இவ்வாறு, ராஜீவ் ரஞ்சன் பேசினார். இக்கூட்டத்தில், தமிழ்நாடு வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேச பூபதி, பண்ணாரி அம்மன் குழுமத் தலைவர் பாலசுப்பிரமணியன், முதன்மை நிர்வாகி சோலைராஜன், கரும்பு இனப்பெருக்க நிலைய இயக்குனர் விஜயன் நாயர், தமிழ்நாடு வேளாண் பல்கலை இயக்குனர்கள் பரமாத்மா, தியாகராஜன், தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் முதன்மை கரும்பு அபிவிருத்தி அலுவலர் சேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மயிலை கொல்லும் முடிவில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2011,00:50 IST

ஈரோடு: ஈரோடு பெருந்துறை பகுதியில், பயிர்களை காப்பாற்ற மயில்களோடும், நாரையோடும் விவசாயிகள் தினந்தோறும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.தமிழகத்தில் மதுரையில் திருப்பரங்குன்றம், நெல்லை, தென்காசி ஆகிய பகுதிகளில் அதிகமாக மயில்கள் உள்ளன. ஈரோட்டில் குன்னத்தூர், திருப்பூர், கோபி ஆகிய பகுதிகளில் உள்ள அதிகமாக மயில்கள் உள்ளன.தமிழகம் முழுவதிலும் தோகைக்காகவும், இறைச்சிக்காகவும், விவசாயிகளின் கோபத்தாலும் அழியும் மயில்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம், ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், 15 மயில்களை கொன்றதாக விவசாயி ஒருவர் கைது செய்யப்பட்டார்.அதன் பின்னர் விழித்து கொண்ட மாவட்ட வனத்துறையினர், "பயிர்களை நாசம் செய்யும் மயில்கள் குறித்து தகவல் கொடுத்தால், அவற்றை பாதுகாப்பாக பிடித்து, வனப்பகுதிக்குள் கொண்டு விட நடவடிக்கை எடுக்கப்படும். மயில்களால் ஏற்பட்ட சேதத்துக்கு, நஷ்ட ஈடு வழங்கப்படும்' என, அறிவித்தனர்.இந்த அறிவிப்பு வெறும் விளம்பரத்தோடு நின்று விட, இன்றளவும் மயில்களோடும், நாரை, கொக்கு உள்ளிட்ட பறவைகளோடும் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.பெருந்துறையை சேர்ந்த விவசாயி முருகேசன் கூறியதாவது:பயிர்களை நாசம் செய்யும் மயில்கள் குறித்து வனத்துறைக்கு தகவல் கொடுத்தால், பாதுகாப்பாக அவற்றை வனப்பகுதிக்குள் கொண்டு விட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட வனத்துறையினர் அறிவித்திருந்தனர். ஆனால், ஈரோடு மாவட்டம் பெருந்துறை, குன்னத்தூர் ஆகிய பகுதிகளில் மயில்களின் தொந்தரவு அதிகமாக உள்ளது.நெல்மணிகளையும், விதைகளையும் மயில்கள் நாசம் செய்வதால், விவசாயிகள் பெருமளவில் õதிக்கப்படுகின்றனர். இது குறித்து வனத்துறை அதிகாரிகளிடம் பல முறை புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.மயில்களிடமிருந்து, பயிரை காக்க அவற்றை

கொல்வது தான் வழி என்கிற முடிவுக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். ஆகஸ்ட் மாதத்தில் மயில்கள் கூட்டமாக இறந்த சம்பவத்துக்கு பிறகாவது, வனத்துறையினர் ஏதாவது நடவடிக்கை எடுப்பர் என, நம்பி இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. பயிர்களை நாசம் செய்யும் மயில்களை, வனப்பகுதிக்குள் கொண்டு விட துரித நடவடிக்கை மேற்கொண்டால் தான், மயிலினத்தை காக்க முடியும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்

**தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2011,01:17 IST

சூலூர்:சூலூர் சுற்று வட்டாரப்பகுதிகளில், கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. தடுப்பணைகளுக்கு நீர் வர துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சூலூர் வட்டாரத்தில் வாழை, தென்னை, தக்காளி, வெங்காயம், மிளகாய் உள்ளிட்ட காய்கறிகளும், மஞ்சள் சோளம், தட்டை பயிறு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களும் அதிகளவில் விளைகின்றன. மேலும் மல்லி, முல்லை, சம்பங்கி உள்ளிட்ட பூ வகைகளும் பயிரிடப்படுகின்றன.
ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பும் இப்பகுதியில் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த சில மாதங்களாக மழை இல்லாமல், போதிய தண்ணீர் வசதி இல்லாத சூழ்நிலை இருந்தது. வாழை,தென்னை, பூக்கள் மற்றும் காய்கறிகளுக்கு போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை இருந்தது. ஆடிப்பட்டத்தில் சோளம் விதைக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வந்தனர். இந்நிலையில் சூலூர், சின்னியம்பாளையம், காங்கயம்பாளையம், அருகம்பாளையம், வாகராயம்பாளையம் மற்றும் போகம்பட்டி, செலக்கரச்சல் உள்ளிட்ட இடங்களில், கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் தொடர் மழை பெய்தது.

இதனால், பெரும்பாலான ஊர்களில் குளம், குட்டைகளில் நீர் தேங்க துவங்கியுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வருவதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:
கடந்த சில தினங்களாக பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். கால்நடைகளுக்கு அதிகளவு தீவனம் கிடைக்கும். விளைநிலங்களில் நீர் தேங்கி, மண்ணின் ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் விளைச்சல் அதிகரிக்கும். இதனால் உழவுப்பணியை துவக்கி உள்ளோம்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.மழையால் சாய்ந்த மின்கம் பங்ககள்:போகம்பட்டி கிராமத்தில், நேற்று முன்தினம் ஒரு மணி நேரம் கன மழை பெய்தது; பலத்த காற்றும் வீசியது. இதனால் செஞ்சேரிமலை ரோட்டில் 5 மின் கம்பங்கள் சாய்ந்தன. இரவு முழுக்க மின் சப்ளை பாதிக்கப்பட்டது.

**குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2011,01:45 IST

சோழவந்தான் : சோழவந்தான் பகுதியில் நெற்பயிரில் பரவிய குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார். சோழவந்தானை சுற்றிய பகுதிகளில் நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. குறைந்த கால ஏ.டி.டி.,36, 45 ரக நெற்பயிரில் பரவலாக குலைநோய் தென்படுகிறது. மகசூல் பாதிக்கப்படும் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்நோயை கட்டுப்படுத்த வாடிப்பட்டி வேளாண் கோட்ட உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: நெருப்பு வைத்து கருகியது போல் காணப்படும் நெற்பயிரில் "டில்ட்' தூள் 40 கிராம் மருந்தினை 50 லிட்டர் தண்ணீருடன் கலந்து விசை தெளிப்பான் மூலம் பயிரில் தெளித்தால், குலைநோயை கட்டுப்படுத்த முடியும். கூடுதல் மகசூலும் கிடைக்கும்.

**அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு பாபநாசம் அணை நீர்மட்டம் 3 அடி உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2011,01:24 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நெல்லை மாவட்டப் பகுதிகளில் கடந்த ஒரு சில நாட்களாக ஆங்காங்கே பரவலாக மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழையின் காரணமாக அணைகளுக்கும் நீர்வரத்தும் அதிகரித்துள்ளது. பாபநாசம் அணையில் நேற்று 27.85 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 834.56 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 107.25 கன அடி வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணையில் 56.84 அடி நீர்மட்டம் உள்ளது. மணிமுத்தாறு அணையில 31.10 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 24 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 8.2 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடனா அணையில் 47 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 92.70 கன அடி தண்ணீர் வருகிறது. 64 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. ராமநதி அணையில் 29 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 30 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. கருப்பாநதி அணையில் 38.94 அடி நீர்மட்டம் உள்ளது.

அணைக்கு வினாடிக்கு 5 கன அடி தண்ணீர் வருகிறது. 10 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. குண்டாறில் 33.12 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 8 கன அடி தண்ணீர் வருகிறது. 2 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வடக்கு பச்சையாறில் 2, நம்பியாறில் 8.85 அடி நீர்மட்டம் உள்ளது. அடவிநயினாரில் 79 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 32.5 கன அடி தண்ணீர் வருகிறது.
அணைகளில் மழை பாபநாசம் மேலணையில் 10 மி.மீ, கீழணையில் 41, சேர்வலாறில் 18, மணிமுத்தாறில் 8.2, கடனா அணையில் 4.2, ராமநதியில் 38, கருப்பாநதியில் 6, குண்டாறில் 2, அடவிநயினாரில் 75 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் மற்ற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 5, ஆய்குடியில் 6.2, சேரன்மகாதேவியில் 26, பாளையில் 3.3, செங்கோட்டையில் 5, சிவகிரியில் 39, தென்காசியில் 45, நெல்லையில் 2, ஆலங்குளத்தில் 45.4 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது.

**பார்த்தீனிய களைச் செடிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2011,01:31 IST

தூத்துக்குடி : நச்சுத்தன்மை கொண்ட பார்த்தீனிய களைச் செடிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண் துணை இயக்குநர் ஆலோசனை வழங்கியுள்ளார். இந்தியாவில் பார்த்தீனியம் 1950ம் ஆண்டு முதலில் கண்டறியப்பட்டது. இக்களைச்செடி அகித விதைகளை உற்பத்தி செய்வதால் விரைவாகப் பரவக்கூடியத்தன்மை கொண்டது. பார்த்தீனிய விதைகள் நான்கே வாரத்திற்குள் நிலத்தில் விழுந்து முளைத்து மீண்டும் பூத்து விதைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. இக்களை விதைகள் காற்றின்மூலம் பரவக்கூடியவை. பாதிப்புகள் : இக்களை ஒவ்வாமை, ஆஸ்துமா, தோல்நோய், சுவாசம் தொடர்பான நோய்களை மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்றன. இவற்றை கால்நடைகள் உண்டுவிட்டால் குடல்புண்கள், ஒவ்வாமை, பசியின்மை, எடைகுறைதல் போன்ற பல பிரச்னைகள் ஏற்படும். பார்த்தீனியகளை மேலாண்மை: ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகளைக் கடைபிடித்து இக்களைகளைக் கட்டுப்படுத்தலாம். செடிகளைப் பிடுங்கி எரித்தல்: செடிகளை பூ பூப்பதற்கு முன்பாக கையுறை அணிந்து அவற்றை வேரோடு பிடுங்கி எரிப்பதன் மூலம் விதைகள் பரவுவதைத் தடுக்கலாம். மாற்றுப் பயிர் முறை : பார்த்தீனியச் செடிகள் அதிகம் காணப்படும் இடங்களில் செவ்வந்திப் பயிரினை பயிர் சுழற்சி முறையில் பயிரிட்டு பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்தலாம். களைக்கொல்லி மூலம் கட்டுப்படுத்துதல்: பார்த்தீனிய செடி விதைகளை அழிக்க நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பொழுது அட்ரசின் களைக் கொல்லியை எக்டருக்கு 2.5 கிலோ என்ற அளவில் சுமார் 625 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பானால் நிலத்தின் மேல் சீராக தெளிக்க

வேண்டும். வண்டுகள் மூலம் அழிக்கும் முறை: பார்த்தீனியச் செடிகளை தின்று அழிக்கக்கூடிய சைக்கோகிரம்மா வண்டுகளை பெருமளவில் வளர்த்து அதை செடிகளின் மீது விடுவதன் மூலம் பார்த்தீனியச் செடிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.பயிர் நிலங்களில் பார்த்தீனியக் கட்டுப்பாடு : பயிர் நிலங்களில் பார்த்தீனியத்தைக் கையால் பறித்து கட்டுப்படுத்தலாம். பின்வரும் களைக் கொல்லிகளைப் பய ன்படுத்தியும் இக்களைகளைக் கட்டுப்படுத்தலாம். அட்ரசின் களைக்கொல்லியை மக்காச்சோளம் வயலுக்கு ஒரு எக்டருக்கு 2கிலோ, சோளம் வயலுக்கு 500கிராம், கம்பு வயலுக்கு 500கிராம், கரும்பு வயலுக்கு 2கிலோ என்ற அளவில் தெளித்து இதனை கட்டுப்படுத்தலாம். சூரியகாந்தி மற்றும் பயறுவகைப் பயிர்கள் உள்ள நிலங்களில் பென்டிமெதலின் களைக்கொல்லியை எக்டருக்கு 3.3 கிலோ என்ற அளவில் பயன்படுத்தலாம். மேற்கண்ட ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு முறைகளை கடைப்பிடித்து நச்சுத்தன்மை கொண்ட பார்த்தீனிய களைச் செடிகளைக் கட்டுப்படுத்திடலாம் என தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

**மேட்டூர் நீர்மட்டம் ஒரு அடி உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2011,00:46 IST

மேட்டூர்: நீர்திறப்பை விட, நீர்வரத்து அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, ஒரு அடி உயர்ந்தது.
ஒகேனக்கல் கீழ்பகுதி காவிரியாற்றில் கலக்கும் சின்னாறு, பாலாறு, தொப்பையாறு, நாகாவதி ஆகிய சிற்றாறுகளின் நீர்பிடிப்பு பகுதிகளில், பருவமழை தீவிரம் அடைந்ததால் மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று முன்தினம் விநாடிக்கு, 22 ஆயிரத்து 445 கனஅடியாக அதிகரித்தது. காவிரி டெல்டா மாவட்டங்களிலும், வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்வதால், பாசனத்துக்கான நீர் தேவை குறைந்துள்ளது. அதனால், விநாடிக்கு, 12 ஆயிரம் கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று முன்தினம் விநாடிக்கு, 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. நீர்திறப்பை விட நீர்வரத்து அதிகரித்ததால், நேற்று முன்தினம், 82.850 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 83.750 அடியாகவும், 44.856 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 45.796 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்தால், நேற்று ஒரேநாளில் அணை நீர்மட்டம் ஒரு அடியும், நீர் இருப்பு ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்தது. நேற்று மாலை விநாடிக்கு, 18 ஆயிரத்து, 504 கனஅடி நீர்வந்தது.